வெளியீடு எண் 147.

# திருக்கடம்பூர்த் திருப்பதிகங்கள்.



சம்பந்தர்



அப்பர்

தருமபுர ஆதீனம்

வெளியீடு எண் 147.

உ

குருபாதம்

திருச்சிற்றம்பலம்.

# திருக்கடம்பூர்த் திருப்பதிகங்கள்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன

௨௫-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளத்தின்படி

வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்

1947.

MAHAL LIBRARY THANJAVUR

பிரதிகள் 300.

ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம்.
P. I. C. Q. H. No. T. E. 68. 5—12—47.

குருபாதம்

# முன்னுரை

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் மாதஜன்ம நக்ஷத்திரத் திருநாட்களில் திருப்பதிகங்கள் பெற்று விளங்கும் சிவத்தலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, தலப்பதிகங்களையும் அச்சிடுவித்து ஆராதனை காலத்தில் வழங்கிவருதல் போல, இம் மாதஜன்ம நக்ஷத்திர தினமாகிய சர்வசித்து௵ கார்த்திகைமீ 22-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை திருக்கடம்பூர் சிவாலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, இவ் வெளியீடும் வழங்கப் பெறுகிறது. அன்பர்கள் பெற்றுப் பதிகங்களைப் பாராயணஞ்செய்து உய்வார்களாக.

உ

குருபாதம்

# அமிர்தகடேசர் வணக்கம்

உருக்கிளர் கடம்பூர்ச் சோதிமின் னம்மை
    ஒன்றிவாழ் அமுத கடேசா!
மருக்கிளர் அமுத மெழத்தவஞ் செய்த
    வாசவன் தனக்கருள் வாழ்வே!
குருக்களை விருந்தைச் சுற்றமுற் றவரைக்
    குறித்துவந் தனைசெயாப் பெரிய
செருக்கினை அறுத்தென் றனக்குநீ அருள்வாய்
    செல்வமே கருணைவா ரிதியே.

குருபாதம்.

## தலச்சிறப்பு.

'கடம்பூர் தன்னில் இடம்பெற இருந்தும்' என்பது மணிவாசகம். சுந்தரர் அருளிய ஊர்த்தொகைப் பதிகத்துள் 'கடம்பூர்மலையே' என்று காணப்படுவதும் இத்தலத்தைப் பற்றிய குறிப்பாகும். திருநாவுக்கரசர் தல ஆலயத்தைக் கரக்கோயி லென்று குறித்துள்ளார். இந்திரன் இங்குவந்து இலிங்கந் தாபித்துப் பூசித்துப் பின் அதனைத் தன்னுலகம் கொண்டு போக எண்ணித் தனது கரத்தால் எடுக்க முற்படஅம் மூர்த்தி பூமியை ஊடுருவிச் சென்றதால் கரக் கோயில் எனப் பெயர்பெற்றது எனவும் காரணம் கூறுவர். இறைவர் **அமிர்தகடேஸ்வர சுவாமி.** இறைவி

சோதிமின்னம்மை, சம்பந்தர் பதிகம் ஒன்றும், நாவுக்கரசர் பதிகம் இரண்டு மாக மூன்று திருப்பதிகங்கள் இத்தலத்திற்கு உள்ளன. கொள்ளிட நதியின் வடபால் இத்தலம் விளங்குகிறது.

## திருப்பதிகப் பொழிப்புரை.

### திருஞானசம்பந்தர் பதிகம்.

1. வானத்து இளமதியோடு கங்காநதியும் பொருந்திய நீண்ட சடையுடையானை, தேன்நிறை கொன்றை மலர் மாலையினானை, தேவர்கள் தொழுதற்குரியானை கானத்துப், பிணையோடு கலைமானும் பயிலுகின்ற திருக்கடம்பூரில் அமர்ந்து விளங்குகின்ற கொள்கையுடையானைத் தாள் தொழ வீடு எளிதாகும்.

2. அரவினோடு ஆமையும் பூண்டு அழகிய வேங்கையினது உரியும் போர்த்துத் திருமுடிமேல் வெண்திங்களுஞ் சூடி யாரும் பரவத்தக்கவனாய் ஒப்பற்ற கடம்பூரில் விரும்பி அமர்ந்து விளங்கும் வெள்ளேற்று அண்ணலுடைய பாதங்களை இரவொடு பகலும் தொடர்ந்து வணங்கப் பேரின்பம் தானே வந்து பொருந்தும் என்பதாம்.

3. மெல்லிய சொற்களுடைய மாதரா ரது குழல்மேல் தெளிந்த புகை கலந்தேறும் படி அறு தொழிலாளர் தீத்தொழில் இயற் றும் திருக்கடம்பூரில் ஒள்ளிய வெண்பிறை யுஞ் சூடி ஒள் நுதல் உமையம்மையோடும் புலித்தோலும் புனைந்து வீற்றிருப்பானது பொன்போன்ற கழற்றிருவடிகளைப் போற்று தல் நம் கடமையாகும்.

4. பறையொடு சங்கம் ஒலிக்க பல கொடியாட விளங்கும் உயர்ந்த மாளிகை

களில் சிவந்த வேல்போலும் செவ்வரி படர்ந்த கண்களையுடைய மாதரார், கலைபயில் ஒலிமிக்க திருக்கடம்பூரில் மறை ஒலியும் தமிழ்ப் பாடலும் விரும்பிநின்று ஆடல் மகிழும் பிறைசேர்ந்த நீண்ட சடையுடையானை போற்றிப் பேண வல்லார் மிகவும் பெரியவராகுவர்.

5. வீரக்கழல் ஒலிக்கும்படி தீ அவிழ்ந்து பரவ ஒரு கரத்தேந்தி சிவந்த குஞ்சியையுடைய பேய்கள் நகைசெய்து ஆனந்திக்க இடுகாட்டின்கண் நட்டம் நவின்றவனுய்க் கொன்றைமலர்க் கண்ணியைச் சூடிய நுதற்கட் பெருமான் மேவியிருக்கும் கடம்பூரில் பொருள்விரிந்த பாடல் பலவும் பாடுதற்கு வல்லவர் பழியொடு பாவமும் இல்லாதவராவர்.

6. தட்பமிக்க நீர்நிறை வயல்கள்தோறும் அலர்ந்த தாமரைமலர்மேல் அன்னங்

கள் விற்றிருப்பதினாலும் கண்கவர் வனப்பினதான சோலைகள்தோறும் வண்டினங்கள் சஞ்சரிப்பதினாலும் தேனொழுகுகின்ற கடம்பூரில் பெண் ஒருகூறுடையானை பின்னல் சடைப் பெருமானைப் பண்ணிறை பாடல் பாடுதல்வல்ல பயிற்சியாளர்கள் பாவம் இல்லாதவர் ஆகுவர்.

மேற்பாடலிற் கூறியவற்றையே ஈண்டும் வற்புறுத்தினார்.

7. பலியேற்க எழுந்தருளுதலால் சிவந்த மலர்ப்பாதம் தோய்ந்தும் பாடலோடு ஆடுதலும் நீங்காத புகழ்மிக்க வீதிகளைச் சூழ்ந்து பசும் பயிர் நிறைந்த திருக்கடம்பூரில் ஒலிமிகு கங்கையாளைச் சடைமிசைக் கரந்து ஒண் நுதல் உமையம்மையினது நாயகனாகிய, புலித்தோல் அரை ஆர்த்தஅவ் இறைவனது அழகுமிக்க திருவடிகளைப் போற்றிப் பணிதலே யாம் கருதும் பொருளென்பதாம்.

8. அழகிய நீர்ப்படுகரில் கயல்மீன்கள் பாய்தலால் பறவைகள் மேற்பறந்து காட்டிடை ஓடவும், வேயொத்த தோளமைந்த பெண்கள் கண்டு மகிழும் வளப்பமிக்க திருக்கடம்பூரில் மிக்க மேம்பாடுடைய உமாதேவியாரை ஒருபாதியில் வைத்த பெருமானே என்று சொல்லி வாழ்த்தி, தேன்நிறை மலர்கள் தூவி திருக்கடம்பூரைத் திசை நோக்கித் தொழுதலினாலேயே தீய வினைகளெல்லாம் கெட்டொழியும் என்பதாம்.

'தில்லைவட்டந் திசை கைதொழுவார் வினை ஒல்லைவட்டங் கடந்து ஓடுதல் உண்மையே' என்றாற்போல இத்தலத்தைத் திசை நோக்கி வணங்குவார்க்கும் தீவினை கெடுதல் திண்ணமாம்.

9. மலர்மகள் உறைமார்பினனாகிய திருமாலும் தாமரைப்பீடத்துப் பிரமதேவனும் அடியும் முடியும் அறியவொண்ணாதபடி பாதளத்தோடு அண்டமுகடும் ஊடுருவ

அழற்பிழம்பாகின்ற நம் ஈசன் கரிய மலை போலும் இராவணனைக் காற் பெருவிரலால் அச்சுறுத்திய கண்ணுதற் பெருமான் மேவி யிருக்கும் கடம்பூரிற் சென்று பாடவல்லார் வானுலகம் பெறுவர் என்பதாம்.

10. திகம்பரராய் நின்று அறம் காட்டும் அமணர்களும் செந்துவராடை போர்த்து நிற்கும் சோடைகளும் நன்னெறி ஈதென சொல்லுவாரல்லர்; அல்லது சொல்லுவா ரேனும் அவ்வுரை உமக்காவதோர் நல்லுரை யன்று; என்றறிவித்துச் சதுரனாய் வேத முதல்வனாய் வேடம்பலபல காட்டியும் காட்டி னிடம் நடமாடியும் அருள்புரியும் கண்ணுத லானைக் கடம்பூரிற் சென்று காண்பீராக.

11. வெண்ணிறத்த இடபம் வரைந்த கொடியையென்றும் தனக்கென உடையானை வெண்ணிறத்த கொடியாடும் பெருமாளிகை கள் ஆதி அந்தம் ஒப்பத் தோன்றும் திருக் கடம்பூரில் மேவி விளங்கும் எனது ஆருயிர்

நாதனை, கடல்சூழ்ந்த சீகாழிப்பதியில் வந்த செந்நெறி பிறழாத திருஞானசம்பந்தனுகிய யான் நயந்து பாடிய இப்பாடல்கள் பத்தை யும் வரிசைபெறப் பாடவுங் கேட்கவும் விரும் புவோர் பழியொடு பாவமும் இல்லாதவராகு தல் திண்ணம்.

பெரும்பாலும் உயர்நெறி மக்கள் பழி யொடு பாவமும் சாராதபடி செய்துகொள்ள விரும்புவோராதலின் இத்தலத்துப் பாடல் களில் பலவிடத்தும் அதனை வற்புறுத்துவா ராயினர்.

## திருநாவுக்கரசு நாயனுர் பதிகம் 1.

1. தயங்குகின்ற · கொடிய அரவத் தோடு குளிர்ச்சிமிக்க இளமதியும் விளங்கு கின்ற நீண்ட சடையையுடைய நமது இறை வர்க்கு இடமாவது கிளர்ச்சிமிக்க பெரிய இசையை வண்டினங்கள் பாடுதல் ஓயாத நற்

சோலையும் மருதமுஞ் சூழ்ந்த திருக்கடம்பூர் கரக்கோயில் என்பதாம்.

பெருங் கோயில் மாடக் கோயில் இளங் கோயில் என்பவைகள்போலக் கரக்கோயில் என்பதும் ஒன்றாகும்.

2. ஐம்புலனையும் வெல்ல வல்லான் நால்வேதமுஞ் சொல்லவல்லான்- சுழற்சியும் தடுமாற்றமும் யாண்டுமிலாத வன்மையுடையான் - மனையறம்புரிய வல்ல மென்றோள் உமையை புல்லுதற்குரியானுக்கு இடம கடம்பூர்க் கரக்கோயில் என்பதாம்.

3. பொய்யிற்றொழாது புலியுரி போர்த்தானது பணியைச் செய்வதே கருத்தாய் எழுந்து அவர்க்காகும் பணி செய்வார்களை இகழ்ந்துரைத்து, இகழ்ச்சி உரைக்கலீர்; நீங்களும் கைதொழுது பணிந்தெழுமின் திருக்கரக்கோயிலுளானை.

இப்பாடலில் உடன்படாது மறுப்பாரை வற்புறுத்திப் பணிந்தெழும்படி கூறுகின்றார்.

4. தன்னை மதியாதவரது மும்மதில்களையும் எரித்தொழித்த முக்கண்ணனுடைய திருக்கடம்பூர்க் கோயில்முன் நின்று பண்ணிறை பாடல் பலவும் பாடி விரைவில் மனத்தாற் றொழுது எழுநெஞ்சமே எனத் தன் நெஞ்சை வற்புறுத்தினர்.

விரும்புவார் விரும்பினது பெறலாம் என்பது குறிப்பு.

5. தடாகங்களில் மலர்ந்த நீலோற்பல மலர்போலும் கண்டத்தையுடையான் பொன்னிறத்த கொன்றை மலர் அழகுசெய்யும் நீண்ட சடையையுடையான், ஒலிக்கின்ற வீரக்கழலை யுடையான்; அவனது திருக்

கரக் கோயிலை இடையறாது நினைக்கின்றவ ரது இருவினைகளும் கெட்டு ஒழியும் என்ப தாம்.

6. சிறந்த மலர்களால் அருச்சனை புரிந்து நாள்தோறும் சிவகணங்களும் பணி ந்து போற்றும் திருக்கரக்கோயிலுளானது எண்குணங்களைப் புகழ்ந்து பேசியும் ஆன் மாக்களாகிய தங்கள் குற்றங்களைப் பேசிக் குறை நேர்ந்தும் வணங்கி வாழ்த்துவோர் மிக்க அன்புடையோர்களென்பதாம்.

7. பண்ணிறைந்த மறைமொழியின்ற பல பூசனை மண்ணுலகத்தவர் செய்து மகிழ்வ தல்லாமலும் நாள்தோறும் விண்ணுலகத் தவரும் கண்டு வியந்து மகிழ்வெய்தும் சிறப் பினையுடையது அழகுமிக்க திருக்கடம்பூர்க் கரக்கோயிலென்பதாம்.

8. அழகிய திருக்கரத்து அனல் ஏந்தி நின்று ஆட, மங்கையர் மகிழ்ந்து பாட நீண்ட

சடையின்கண் கங்கையாளையுங் கரந்து வைத்து உகந்தானது திருக்கரக்கோயிலைத் தங்களது கைகளாற் றொழுவாரது தீவினை தலைசாய்ந்து நாணும் என்பதாம்.

தீவினைகள், கரக்கோயிலைத் தொழுவாரிடத்து எதிர்க்கமாட்டாது தலைசாய்ந்து நாணிவிடும் என்பதாம்.

9. நல்ல கடப்பமாலையணிந்த பரந்த மார்பினையுடைய முருகப் பெருமானைப் பெருது பெற்ற உமாதேவியாரைத் திருமேனியில் வைத்து, அழகிய திருக்கடம்பூர் கரக்கோயிலுள் வீற்றிருப்பானது கடமை அடியேனையும் தளரவிடாது தாங்குதலாகும்; எனது கடமை இடையருது பணிசெய்து கிடப்பதேயாகும்.

10. விரிந்த பாற்கடலின்கண் ஆதிசேட சயனனுகிய திருமாலோடும் மணம் வீசுகின்ற தாமரைப்பீடத்தனுன பிரமதேவனும் தம்

முள் மாறுபட்டு அடிமுடிதேட அனற்பிழம்பாய் ஓங்கிநின்ற நமது இறைவர்க்கு இடம் சிவகணங்களும் போற்றிப்பணியும் கடம்பூர் திருக்கரக்கோயில் என்பதாம.

11. மலைபோன்ற இருபது தோள்களை யுடைய இராவணனது தலைகள் பத்தையும் நெறுநெறெறன உக்குமாறு செய்து மீண்டும் நல்லிசைகேட்டு அருள்புரிந்த நம்மீசனுர்க் கிடமாகிய அலைமோதுகின்ற நீர்நிலை சூழ்ந்த திருக்கரக்கோயிலை உவந்து உரைக்கும் உள்ளம் உடையாரது, இரண்டு வினைகளும் ஒய்ந்துபோய்விடுமென்பதாம்.

சென்று 'தொழுவோர் வினை ஓய்ந்து விடும் என்பதைச் சிற்றம்பலவரைச் சென்று சென்று தொழுவார்வினை நிற்கிலே நிற்பதா வது இத்தொல்புன்த்தே என்று தினைகடிந்த மைக்குத் தொழுவார்வினை கடிந்தமையை உவமானம் செய்து தோழி கூற்றுகவரும் தினை

கடிந்தமை கூறி வரைவுகடாதலென்னும் திருச்சிற்றம்பலக்கோவையார் துறையினலும் இனிது தெளிந்துகோடலுமாம்.

## பதிகம் 2.

*1.* முன்னே ஒருவனய் நின்றவன் பின்னே இருவராயும் மூவராயும் நின்று குருபரனயும் வந்து அருள்புரியும் குழகனகிய நமது இறைவனது இடம் பருத்த வரால் மீன்கள் குதித்து விளையாடுகின்ற மருதநிலஞ்சூழ்ந்த, யாவும் தோன்றற்கிடமாகிய திருக்கடம்பூர்க் கரக்கோயிலென்பதாம்.

'ஒருருவாயினை, பின்னும் படைத்தளித் தழிப்ப மும்மூர்த்திகளாயினை' என்னும்காழிநாதன் வாக்காலும் இனிது உணரலாம்.

2. வன்னித்தளிரும் மத்தமலரும் வளரிளந் திங்களும் ஒப்பற்ற கங்கையாளையும்

சடைமிசை வைத்து உகந்து பொன்பூத்த பணைத்த பயோதரங்களையுடைய உமாதேவி யாரோடும் இனிது வீற்றிருந்தானது இடம் திருக்கடம்பூர்க் கரக்கோயிலென்பதாம்.

3. இல்வாழ்க்கைக்குரிய அழகும் இளமையும் ஆகிய எல்லாம் நிலையுதலின்றி அல்லற்படுத்துவன ஆதலின் அதனை நீத்து உய்திபெற வல்லீராகில் விரைவிலே சென்று அடையுங்கள்; திருக்கடம்பூர் நகரத்து செல்வமோங்கு திருக்கரக் கோயிலுளானை என்பதாம்.

இத்திருநாவுக்கரசு சுவாமிகள் நடையருப் பெருந் துறவு உடையோராதலின் இவ்வாறு வற்புறுத்திக் கூறினார்கள்.

4. பல்வேறுபட்ட அவாமிக்க சிந்தையில்லாதவர்களது தீயவினைகளைக் கூறுபடச் செய்த குழகனாகிய நமது சிவபெருமான் உறைவிடம் பெருஞ்செல்வத் தேவர்களும்

தொழுது வணங்கும்படி வளமிக்க திருக்கடம்பூர் திருக்கரக்கோயில் என்பதாம்.

5. இளமதிதங்கிய சிவந்த சடைமேலும் ஒரு மங்கையைவைத்து உகந்த நாதனுகிய நம் இறைவனது இருப்பிடம் மணல்மிக்க பரப்பினிடத்து புன்னைமரங்களும்சரக்கொன்றைமரங்களும் தெங்கினங்களும் சூழ்ந்து அழகுசெய்யும் திருக்கடம்பூர்க் கரக்கோயில் என்பதாம்.

6. வளப்பமிக்க இஞ்ஞாலத்து வாழ்கின்ற உயிர்களுக்கெல்லாம் அருளுந் தகைமையில் எல்லையாய்நிற்கும் நம்இறைவனது இருப்பிடம் தனித்த முல்லையும் மல்லிகையும் செறிந் தழகுசெய்யும் கடம்பூர்க் கரக்கோயிலென்பதாம்.

7. துவளும் இளைய அரவங்களோடு தண்மதியும் வாழ்கின்ற பொன்னொத்த சடைப்பெருமான் வாழ்விடமாவது சுரும்

பினம் இசைபாடி மகிழ்ந்து உலாவும் சோலை சூழ்ந்த திருக்கடம்பூர்க் கரக்கோயிலென்பதாம்.

8. உயிர்களுக்கெல்லாம் மிக்க நண்பினராகியும் உறவினராகியும் பெற்ற தாய்தந்தையராகியும், முற்றறிவில்லாத அசுரர்களது மும்மதில் எய்தும் அருள்புரியும் நம் இறைவன் உறைவிடம் கற்றுணர்ந்தோர் சேர்ந்து வாழும் திருக்கடம்பூர்க் கரக்கோயிலென்பதாம்.

இறைவன் பொருந்தினவகையில் ஆன்மாக்களுக்கு அருள்புரிவான் என்பதை 'மைந்தாபோற்றி, மணாளாபோற்றி, தோழாபோற்றி துணைவாபோற்றி' என்று வரும் வாதவூர்ச்சிவபாத்தியன் செய்தருளிய திருவாசகம் முதலிய திருவாக்குகளாலும் உணரலாம்.

10. வெள்ளிய திருநீற்றையணிந்த திரு மேனியையுடைய மெய்யடியார்களது உள்ளமே இடமாய்க்கொண்டு இளவெண் மதி சூடிய சென்னிப் பிரானும் யார்க்கும் அறியவொண்ணுத கள்வனுமாகிய எம்பெருமான் உறைவிடம் வளஞ்சேர் கடம்பூர் கரக்கோயிலென்பதாம்.

11. நீர்சூழ்ந்த தென்னிலங்கைக் கிறைவனுகிய இராவணன் தன் உரத்தினுல் கயிலாய மலையை எடுக்கலுற்றபொழுது இரக்கமின்றித் தனது திருவடி விரலொன்றுல் அவன் ஆற்றல் முழுவதும் கெட அடர்த்து நசுக்கிய நமது சிவபெருமாற்கிடம் திருக்கடம்பூர்க் கரக்கோயிலென்பதாம்.





உ

சிவமயம்

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

**பண்—காந்தாரம்.**

இராகம்-நவரோஸ்] [தாளம்-ஆதி.

திருச்சிற்றம்பலம்

ஸ
ஜீ

வானமர் திங்களு நீரு
மருவிய வார்சடை யானைத்
தேனமர் கொன்றையி னானைத்
தேவர் தொழப்படு வானைக்
கானம ருப்பிணை புல்கிக்
கலைபயி லுங்கடம் பூரில்
தானமர் கொள்கையி னானைத்
தாடொழ வீடெளி தாமே. க

அரவினொ டாமையும் பூண்டு
வந்துகில் வேங்கை யதளும்
விரவுந் திருமுடி தன்மேல்
வெண்டிங்கள் சூடி விரும்பிப்
பரவுந் தனிக்கடம் பூரிற்
பைங்கண்வெள் ளேற்றண்ணல் பாதம்
இரவும் பகலும் பணிய
வின்ப நமக்கது வாமே. ௨

இளிபடு மின்சொலி னார்கள்
இருங்குழன் மேலிசைந் தேறத்
தெளிபடு கொள்கை கலந்த
தீத்தொழி லார்கடம் பூரில்
ஒளிதரு வெண்பிறை சூடி
யொண்ணுத லோடுட னாகிப்
புலியத ளாடை புனைந்தான்
பொற்கழல் போற்றுது நாமே. ௩

பறையொடு சங்க மியம்பப்
பல்கொடி சேர்நெடு மாடம்
கறையுடை வேல்வரிக் கண்ணார்
கலையொலி சேர்கடம் பூரில்
மறையொலி கூடிய பாடன்
மருவினின் றுடன் மகிழும்
பிறையுடை வார்சடை யானைப்
பேணவல் லார்பெரி யாரே. ௪

தீவிரி யக்கழ லார்ப்பச்
சேயெரி கொண்டிடு காட்டில்
நாவிரி கூந்தனற் பேய்கள்
நகைசெய்ய நட்ட நவின்றோன்
காவிரி கொன்றை கலந்த
கண்ணுத லான்கடம் பூரில்
பாவிரி பாடல் பயில்வார்
பழியொடு பாவ மிலாரே. ௫

தண்புன னீள்வயல் தோறுந்
தாமரை மேலனம் வைகக்
கண்புணர் காவில்வண் டேறக்
கள்ளவி ழுங்கடம் பூரில்
பெண்புணே கூறுடை யானைப்
பின்னு சடைப்பெரு மானைப்
பண்புனே பாடல் பயில்வார்
பாவமி லாதவர் தாமே. ௬

பலிகெழு செம்மலர் சாரப்
பாடலோ டாட லறுத
கலிகொழ வீதி கலந்த
கார்வயல் சூழ்கடம் பூரில்
ஒலிதிகழ் கங்கை கரந்தான்
ஒண்ணுத லாளுமை கேள்வன்
புலியத ளாடையி னன்றன்
புனேகழல் போற்றல் பொருளே. ௭

பூம்படு கிடங்கயல் பாயப்
புள்ளிரி யப்புறங் காட்டில்
காம்படு தோளியர் நாளுங்
கண்கவ ருங்கடம் பூரில்
மேம்படு தேவியொர் பாகம்
மேவியெம் மானென வாழ்த்தித்
தேம்படு மாமலர் தூவித்
திசைதொழத் தீய கெடுமே. ௮



திருமரு மார்பி லவனுந்
திகழ்தரு மாமல ரோனும்
இருவரு மாயறி வொண்ணா
எரியுரு வாகிய வீசன
கருவரை காலி லடர்த்த
கண்ணுத லான்கடம் பூரில்
மருவிய பாடல் பயில்வார்
வானுல கம்பெறு வாரே. ௯

ஆடை தவிர்த்தறங் காட்டு
  மவர்களு மந்துவ ராடைச்
சோடைக ணன்னெறி சொல்லார்
  சொல்லினுஞ் சொல்லல கண்டீர்
வேடம் பலபல காட்டும்
  விகிர்தனம் வேதமு தல்வன்
காடத னில்நட மாடுங்
  கண்ணுத லான்கடம் பூரே. ௧௦

விடைநவி லுங்கொடி யானை
  வெண்கொடி சேர்நெடு மாடம்
கடைநவி லுங்கடம் பூரிற்
  காதல னைக்கடற் காழி
நடைநவில் ஞானசம் பந்தன்
  நன்மையா லேத்திய பத்தும்
படைநவில் பாடல்ப யில்வார்
  பழியொடு பாவமி லாரே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்



# திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

## திருக்குறுந்தொகை.

இராகம் - நாதநாமக்கிரியை    தாளம் - சாப்பு.

திருச்சிற்றம்பலம்

தளருங் கோளர வத்தொடு தண்மதி
வளருங் கோல வளர்சடை யார்க்கிடம்
கிளரும் பேரிசைக் கின்னரம் பாட்டறாக்
களருங் கார்க்கடம் பூர்க்கரக் கோயிலே. ௧

வெலவ லான்புல னைந்தொடு வேதமும்
சொலவ லான்சுழ லுந்தடு மாற்றமும்
அலவ லான்மனை யார்ந்தமென் றோளியை
கலவ லான்கடம் பூர்க்கரக் கோயிலே. ௨

பொய்தொ ழாது புலியுரி யோன்பணி
செய்தெ ழாவெழு வார்பணி செய்தெழ
வைதெ ழாதெழு வாரவ ரெள்கலீர்
கைதொ ழாவெழு மிக்கரக் கோயிலே. ந

துன்னெ ணுமனத் தாற்றொழு நெஞ்சமே
பண்ணி னுன்முனம் பாடலது செய்தே
எண்ணி லாரெயின் மூன்று மெரித்தழுக்
கண்ணி னுன்கடம் பூர்க்கரக் கோயிலே ச

சுனையுள் நீல மலரன கண்டத்தன்
புனையும பொன்னிறக் கொன்றை புரிசடைக்
கனையும் பைங்கழ லான்கரக் கோயிலை
நினையு முள்ளத் தவர்வினை நீங்குமே. ரு

குணங்கள் சொல்லியுங் குற்றங்கள் பேசியும்
வணங்கி வாழ்த்துவ ரன்புடை யாரெலாம்
வணங்கி வான்மலர் கொண்டடி வைகலும்
கணங்கள் போற்றிசைக் குங்கரக் கோயிலே. ௬

பண்ணி னார்மறை பல்பல பூசனை
மண்ணி னார்செய்வ தன்றியும் வைகலும்
விண்ணி னார்கள் வியக்கப் படுவன
கண்ணி னார்கடம் பூர்க்கரக் கோயிலே. ௭

அங்கை யாரழ லேந்திநின் றாடலன்
மங்கை பாட மகிழ்ந்துடன் வார்சடைக்
கங்கை யானுறை யுங்கரக் கோயிலை
தங்கை யாற்றொழு வார்வினை சாயுமே. ௮

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே. ௯

பணங்கொள் பாற்கடற் பாம்பணை யானொடு
மணங்க மழ்மலர்த் தாமரை யானவன்
பிணங்கும் பேரழ லெம்பெரு மாற்கிடம்
கணங்கள் போற்றிசைக் குங்கரக கோயிலே. ௧௦

வரைக்க ணாலஞ்சு தோளுடை யான்றலை
அரைக்க வூன்றி யருள்செய்த வீசனார்
திரைக்குந் தண்புனல் சூழ்கரக் கோயிலை
உரைக்கு முள்ளத் தவர்வினை யோயுமே. ௧௧

திருச்சிற்றம்பலம்.

## திருக்குறுந்தொகை

இராகம் - நாதநாமக்கிரியை; தாளம் - சாப்பு

திருச்சிற்றம்பலம்

ஒருவ ராயிரு மூவரு மாயவன்
குருவ தாய குழக னுறைவிடம்
பருவ ரால்குதி கொள்ளும் பழனஞ்சூழ்
கருவ தாங்கடம் பூர்க்கரக் கோயிலே. க

வன்னி மத்தம் வளரிளந் திங்களோர்
கன்னி யாளைக் கதிர்முடி வைத்தவன்
பொன்னின் மல்கு புணர்முலை யாளொடும்
மன்னி னான்கடம் பூர்க்கரக் கோயிலே. உ

இல்லக் கோலமு மிந்த இளமையும்
அல்லற் கோல மறுத்துய வல்லிரே
ஒல்லைச் சென்றடை யுங்கடம் பூர்நகர்ச்
செல்வக் கோயி றிருக்கரக் கோயிலே. ௩

வேறு சிந்தை யிலாதவர் தீவினை
கூறு செய்த குழக னுறைவிடம்
ஏறு செல்வத் திமையவர் தாந்தொழும்
ஆறு சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. ௪

திங்கள் தங்கிய செஞ்சடை மேலுமோர்
மங்கை தங்கு மணாள னிருப்பிடம்
பொங்கு சேர்மணற் புன்னையு ஞாழலும்
தெங்கு சேர்கடம் பூர்க்கரக் கோயிலே ௫

மல்லை ஞாலத்து வாழு முயிர்க்கெலாம்
எல்லை யான பிரானு ரிருப்பிடம்
கொல்லை முல்லை கொழுந்தகை மல்லிகை
நல்ல சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. ௬

தளரும் வாளர வத்தொடு தண்மதி
வளரும் பொற்சடை யார்க்கிட மாவது
கிளரும் பேரொலி கின்னரம் பாட்டறுக்
களரி யார்கடம் பூர்க்கரக் கோயிலே. ௭

உற்று ராயுற வாகி யுயிர்க்கெலாம்
பெற்று ராய பிரானு றுறைவிடம்
முற்றூர் மும்மதி லெய்த முதல்வனுர்
கற்றூர் சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. ௮

* * * * ௯

வெள்ளை நீறணி மேனி யவர்க்கெலாம்
உள்ள மாய பிரானு ருறைவிடம்
பிள்ளை வெண்பிறை சூடிய சென்னியான்
கள்வன் சேர்கடம் பூர்க்கரக் கோயிலே. கo

பரப்பு நீரிலங் கைக்கிறை வன்னவன்
உரத்தி னைலடுக் கல்லெடுக் கல்லுற
இரக்க மின்றி யிறைவிர லாற்றலை
அரக்கி னன்கடம் பூர்க்கரக் கோயிலே. கக

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்

காட்டூர் கடலே கடம்பூர் மலையே
கானப் பேரூராய்
கோட்டூர் கொழுந்தே அழுந்தூர் அரசே
கொழுநற் கொல்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய்
பனங்காட் டூரானே
மாட்டூர் அறவா மறவா தன்னைப்
பாடப் பணியாயே.

திருச்சிற்றம்பலம்

—சுந்தரர்.